The Indian EXPRESS ie தமிழ்

**தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு; அதிகாரிகள் சொத்து மதிப்பு: லஞ்ச ஒழிப்புத்துறைக்கு ஐகோர்ட்டு புதிய உத்தரவு**

15 Jul 2024 18:56 IST



தூத்துக்குடி துப்பாக்கி சூடு சம்பவம் நடந்த காலத்தில் பணியாற்றிய காவல் துறையினர் உள்ளிட்ட அதிகாரிகளின் சொத்து விவரங்களை விசாரிக்க வேண்டும் என சென்னை உயர் நீதிமன்றம் கூறியுள்ளது.

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக போராடிய மக்கள் மீது காவல் துறையினர் கடந்த 2018 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் தேதி துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 13 பேர் உயிரிழந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக, தேசிய மனித உரிமை ஆணையம் தாமாக முன்வந்து வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொண்டது. ஆணையத்தின் புலன் விசாரணைப் பிரிவு அளித்த அறிக்கை மற்றும் தமிழக அரசு அளித்த அறிக்கையின் அடிப்படையில் இந்த வழக்கைத் தேசிய மனித உரிமை ஆணையம் முடித்து வைத்தது.

இதற்கிடையில் இந்த வழக்கு இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, தமிழக லஞ்ச ஒழிப்புத் துறைக்கு சென்னை உயர்நீதிமன்றம் புதிய உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது.

அந்த உத்தரவில், "தூத்துக்குடி துப்பாக்கி சூடு சம்பவம் நடந்த காலத்தில் பணியாற்றிய காவல் துறையினர் உள்ளிட்ட அதிகாரிகளின் சொத்து விவரங்கள் விசாரிக்க வேண்டும்" எனத் தெரிவித்துள்ளது.

தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு விவகாரத்தில் தமிழக லஞ்ச ஒழிப்புத் துறைக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

https://tamil.indianexpress.com/tamilnadu/the-high-court-ordered-to-inquire-into-the-property-details-of-the-police-who-served-during-the-thoothukudi-firing-6142969